# பாலஸ்தீனம்
## யூத - சியோனிச சதிகள் - ஒரு வரலாற்றுப் பார்வை

பலஸ்தீன மண்ணில் தொடர்ந்து கொடுமைகள் இடம் பெற்று வருகின்றன. யூத சியோனிச அரச அந்தப் பூமியின் மைந்தர்களை படுகொலை செய்து வருகின்றது. தங்களுக்கு பலஸ்தீன மண்ணில் ஓர் அங்குல உரிமை கூட பாராட்ட முடியாத நிலையில் சியோனிஸ்டுகள் அந்த மண்ணின் ஒரு பகுதியை அபகரித்து இஸ்ரேல் எனப் பெயர் சூட்டிக் கொண்டனர். இன்று இவர்கள் அபகரித்த பூமியை விஸ்தரிக்க பயங்கரவாதத்தை முடுக்கி விட்டுள்ளார்கள்.

எனினும் உலகம் ஏமாந்து போயுள்ளது. தான் இழந்த பூமியை மீட்கப் போராடும் பலஸ்தீனப் போராளிகளை பயங்கரவாதிகள் என அழைக்கிறது. இது அமெரிக்கா கற்றுக் கொடுத்த பாடம். இந்தப் பாடப் போதனையிலிருந்து விடுபட்டு நியாயமாக சிநதிக்கத் தவறுவோர் தமது நியாயங்களுக்காக நியாய வழியில் நின்று போராட முடியாத நிலைக்குத் தள்ளப்படுவர்.

எனவே, பயங்கரவாதம் என்றால் என்ன, யார் பயங்கரவாதி என்பவற்றை விளங்கிக் கொள்வதற்காக பலஸ்தீன் பற்றிய உண்மைகள் சிலவற்றை வரலாற்றிலிருந்து தெரிந்து கொள்வது அவசியம்.

பலஸ்தீன மக்கள் தயாகமொன்று இன்றி தவித்தவர்கள் அல்லர். அடுத்தவரின் சொத்தை அபகரித்து தன் சொர்க்கபுரியை அமைத்துக் கொள்ள போராடியவர்களும் அல்லர். அவர்களுக்குத் தொன்மை மிக்க வரலாறொன்று இருக்கின்றது. அந்த வரலாறு பலருக்கு தெரியாததால் யூத சியோனிஸவாதிகள் பலஸ்தீனை தனதாக்கிக் கொள்ள பின்கதவினை ஊடாக பிரவேசித்து அக்கிரமம் புரிந்து வருகின்றனர்.

### யூத ஊடுருவல்கள்

பலஸ்தீன மக்களின் மூதாதையர்கள் யபூஸியர் என அழைக்கப்படுகின்றனர். கி.மு. 4000 ஆண்டளவில் வாழ்ந்த அவர்கள் குத்ஸ் நகரை நிர்மாணித்தவர்களாவர். பலஸ்தீனின் பூர்வீக சொந்தக்காரர்களான அவர்கள் பலஸ்தீனின் பூர்வீக சொந்தக்காரர்களான அவர்கள் உருவாக்கிப் பின்பற்றிய பரம்பரை ஒழுங்கு அவர்களின், பின் சந்ததியினரான பலஸ்தீன் அரபுக்களால் கூட மிகச் சிறப்பாகப் பின்பற்றியதற்கு ஏராளமான வரலாற்றுச் சான்றுகள் உள்ளன.

அந்த ஒழுங்கை சிதைந்து சின்னாபின்னமாக்கும் வகையில் கி.மு.1300 அளவில் யூதர்கள் (மூஸா நபியின் சமூகம்) முதன் முதலாக பலஸ்தீனுள் பிரவேசிக்கின்றார்கள். சுமார் 200 வருட காலம் பல சர்ச்சைகளில் ஈடுபட்ட அவர்கள் இறுதியில் அங்கு வாழ்வதற்கான வழியை அமைத்துக் கொள்கிறார்கள்.

எனினும் அவர்களது அந்த வாழ்வு வெகுகாலம் நீடிக்கவில்லை. கி.மு.8 ஆம் நூற்றாண்டில் அங்கு பிரவேசித்த அஸீரியப் படைகளும், கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் அங்கு வந்த பாபிலோனிய மன்னான நஸ்ஸரின் படைகளும் முறையே யூதர்களை விரட்டியடித்து விட்டு அரபு மக்களை மீளக் குடியேறச் செய்கின்றன. நஸ்ஸரின் படைகள் ஒரு படி முன்னே சென்று பைத்துல் முகத்தஸை உடைத்து விட்டு. சுலைமான் (அலை) அவர்கள் நிர்மாணித்த ஹைக்கல் சுலைமானி எனும் கோயிலையும் தரைமட்டமாக்கினர்.

பின்னர் ஈரானிய ஆட்சி வியாபித்த போது யூதர்கள் மீண்டும் பலஸ்தீனில் வந்து குடியேறினர். அத்துடன் ஹைக்கல் சுலைமானி எனும் கோயிலையும் நிர்மாணித்தனர்.

ஆனால் அவர்களது துரதிஷ்டம் அந்தப் புதுவாழ்வு சுமார் 300 அல்லது 400 வருடங்களுக்கு மேல் நிலைக்கவில்லை. அதற்குக் காரணமானோர் அவர்களே. அதாவது பலஸ்தீனில் வந்து குடியமர்ந்த

யூதர்கள் கி.பி.70 ல் ரோம சாம்ராஜ்யத்திற்கு எதிராகக் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தனர். இதன் விளைவாக பைத்துல் முகத்திஸ ம், சுலைமான் கோயிலும் அழிக்கப்பட்டன. யூதர்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டனர். மீண்டும் அங்கு வாழ்ந்த அரபியர் மீளமர்த்தப்பட்டனர்.

### இஸ்லாமிய ஆட்சிக்குள்..!

பின்னர் பலஸ்தீனை ரோமர்களிடமிருந்து கலீபா உமர் (ரலி) அவர்கள் காலத்தில் மீட்டெடுக்கப்பட்ட போது ரோம பைஸாந்திய படையினர் ஜெரூஸலத்தின் திறவுகோளை உமர் (ரலி) அவர்களிடம் கையளித்த முறை வரலாற்று சிறப்பு மிக்க நிகழ்ச்சியாகத் தொகுக்கப்பட்டுள்ளது. அதன் பின்னரும் இடையிடையே கிறிஸ்தவ ஊடுருவல்கள் இடம் பெற்றன. சிலுவை யுத்தங்களும் நிகழ்ந்தன. முடிவில் சுல்தான் ஸலாஹு த்தீன் அய்யூபி (ரஹ்) அவர்கள் பலஸ்தீனை முழுமையாக விடுவித்துக் கொண்டார்கள்.

இடைக்காலத்தில் பலரது இடையூறுகளுக்கு மத்தியில் இஸ்லாமிய வட்டத்தை தாண்டாத பலஸ்தீன், துருக்கிய சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாக கடைசி கலீபா சுல்தான் அப்துல் ஹமீத் கான் அவர்களின் ஆட்சியினுள் அமையப் பெற்றிருந்தது.

### யூதர்களுக்கு முஸ்லிம்களிடையே அமைதி

இதே சம காலத்தில் யூதர்கள் தமக்கென ஒரு நாடு, தலைவன், சமூக அமைப்பு எதுவும் இல்லாமல் உலகெங்கும் சிதறி வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர். இந்த நிலையில் கூட அவர்களால் அமைதியாக வாழ முடிந்தது முஸ்லிம்களின் ஆட்சிப் பகுதியில் மாத்திரமே. குறிப்பாக ஸ்பெயினில் இஸ்லாமிய ஆட்சி இருந்த 800 வருட காலமம் அவர்கள் நிம்மதியாக வாழ்ந்தனர் என்பது அவர்களே ஒப்புக் கொண்ட விடயம்.

யூதர்கள் மிகவும் புனிதமான சின்னமாக கருதும் அழும் சுவர் (The Wailing Wall) கூட முஸ்லிம்களது நல்லெண்ணம் காரணமாகவே மீண்டும் கிடைத்தது எனக் குறிப்பிடலாம். அது பற்றி அவர்களே குறிப்பிடுதாவது,

அழும் சுவர் ஆரம்பத்தில் பாரிய குப்பை கூழங்களால் சிக்குண்டிருந்தது. எவருக்கும் அது பற்றிய அடையாளம் கூட தெரிந்திருக்கவில்லை. கி.பி.16 ம் நூற்றாண்டில் சுல்தான் ஸலீம் உஸ்மான் அவர்களுக்கு தற்செயலாக இச்சுவர் பற்றிய எண்ணம் ஏற்பட்டது. எனவே அவ்விடத்தை சுத்தம் செய்து யூதர்களுக்கு அதனைத் தரிசிப்பதற்கு அனுமதியும் வழங்கினர். News from Israel Bombay – 01.07.1967.

### கிறிஸ்தவக் கொடுமைகள்

இதே வேளை ஐரோப்பிய கிறிஸ்தவ நாடுகளோ யூதர்களை பல கொடுமைகளுக்கு ஆளாக்கிய வரலாற்றைப் பார்க்க முடிகிறது. சுமார் 2000 ஆண்டுகள் வரை யூதர்கள் கிறிஸ்தவரின் கொடுமைகளுக்கு ஆளாகி வந்துள்ளனர். ஜெர்மனியில் 1933 - 1945 காலப் பகுதியில் ஹிட்லரின் கொடுமைகளுக்கு ஆளான யூதர்களுள் சுமார் 60 லட்சம் பேர் சித்திரவதை செய்யப்பட்டு இறந்துள்ளனர். இது மட்டுமல்ல, உலகில் சிதறி வாழ்ந்த அவர்களுக்கு எம் நாட்டில் இடமளித்து வாழச் செய்வோம் என எந்த மேற்கத்திய நாடும் முன்வரவில்லை. இதற்கு யூதர்களின் இயற்கையான போக்கும் ஒரு காரணமே.

### யூத நாடு பற்றிய சிந்தனை

இவர்களது நிலை இப்படி தொடரும் போது கி.பி.1896 ல் தியோடர் ஹெர்ஸ்ல் (Theodor Herzl 1860-1904) என்றொரு நாடக எழுத்தாளர் யூத மக்களுக்கு ஒரு தாயகம் வேண்டும் என்பதை விவரித்து

Der Judenstaat (யூத நாடு) என்ற தலைப்பில் ஒரு நூலை எழுதினார். கி.பி.1897 ல் முதலில் 6 யூத தனவந்தர்கள் இவரது நூலின் கருத்துக்களை ஆராய்ந்தனர். பின்னர் சுவிட்சர்லாந்தில் 29-31/8/1897 ல் கூடிய யூத அறிஞர்கள் மற்றும் தனவந்தர்கள் 204 பேர் தங்களுக்கு பலஸ்தீனில் ஒரு தாயகம் அமைய வேண்டும் என்று முடிவெடுத்தனர்.

உலக யூத காங்கிரஸ் (The World Jewish Congress) என அழைத்துக் கொண்ட அவர்கள் இத்திட்டத்தை ஐந்து வருடத்தில் நிறைவேற்றுதவதாக முடிவெடுத்தனர். எப்படியும் 50 வருடங்களை மீறாத இதன் கால எல்லை என்பது அவர்களது திடமான முடிவு.

இதைத் தொடர்ந்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த பணம் வேண்டும். அதற்காக யூதர்களின் தேசிய நிதி (Jewish National Fund) என்றொரு நிதியத்தை ஆரம்பித்தனர். வட்டி வழியின் மூலமும் உடனடிக் காசு கொடுப்பதன் மூலமும் நிலம் வாங்கவென நில வங்கி (Land Bank) ஒன்றை ஆரம்பித்தனர். அதோடு தமக்கென ஹீப்று மொழியிலான தேசிய கீதமொன்றையும் உருவாக்கினர். தமிழில் நம்பிக்கை என்ற கருத்தை தரும் அதன் ஹீப்ரு பெயர் Hatikvah என்பதாகும். இவையனைத்தையும் ஆஸ்திரிய நாட்டைச் சேர்ந்த தியோடர் ஹர்ஸ்ல் என்பவரே ஏற்பாடு செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதைத் தொடாந்து உலக நாடுகளிலிருந்து பலஸ்தீன் நோக்கி யூதர்கள் வரலாயினர். அதன்படி 1917 ல் பலஸ்தீனின் சனத்தொகை முஸ்லிம்கள் 567,000, யூதர்கள் 70,000 மற்றும் கிறிஸ்தவர்கள் 63,000 என்றாயிற்று. அதே வேளை உலக மகா யுத்தம் முடிவுற்று 1917 ல் பலஸ்தீன் பிரிட்டனின் கீழ் அமைந்த நாடாக மாறியதுடன் அவர்களது படையும் அங்கு வந்து குவிந்தது.

### பிரிட்டனின் சதி

அப்பொழுது பிரிட்டனின் வெளிநாட்டுச் விவகாரங்களுக்குப் பொறுப்பான செயலாளராக இருந்த ஆதர் பெல்ஃபர் என்பவர் ஒரு பிரகடனத்தை வெளியிட்டார். அது 1917 நவம்பர் 2 ஆம் தேதி வெளியிடப்பட்டது. அந்தப் பிரகடனத்தை வெளியிட பிரிட்டிஷ் அரசுக்குத் தொடர்ந்து தூண்டுதல் வழங்கவியவர் செயிம் வெய்ஸ்மேன் (ஊாயஅை றுநளைஅயெ 1874-1952) என்ற ரஷ்ய யூதராவார். இவர் யூத – சியனிஸ அமைப்பின் 1948-1952 காலப் பிரிவின் தலைவராவார். இஸ்ரேல் உருவான பின ஜெரூஸலம் ஹீப்ரு பல்கலைக்கழகத்தின் தலைவராகவும் கடமையாற்றினார்.

இந்த பெல்ஃபர் பிரகடனத்தின் முக்கிய பகுதி இவ்வாறு பேசுகிறது :

யூதர்களுக்கு பலஸ்தீனில் ஒரு தேசியத் தாயகம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதை இங்கிலாந்து அரசு மிகவும் பரிவுடன் கவனிக்கிறது. இதனை ஏற்படுத்த எல்லா முயற்சிகளையும் இங்கிலாந்து மேற்கொள்ளும். அதேவேளை இப்போது அங்கே குடியிருக்கும் யூதர்களல்லாத மக்களுடைய பொதுவான உரிமைகளுக்கோ, மத உரிமைகளுக்கோ பங்கம் வராது பார்த்துக் கொள்ளும்!.

இந்தப் பிரகடனம் பலஸ்தீனில் பிறந்து வாழ்ந்து வரும் முஸ்லிம்களை இரண்டாம் தர பிரஜை என்ற நிலைமைக்குத் தள்ளுகிறது. அத்துடன் இன்னும் ஆட்சியோ, நாடோ, சமூக அமைப்போ பெறாத யூதர்கள் முதல் நிலைக்குக் கொண்டு வரப்படுவதை அங்கீகரிக்கிறது.

இதைத் தொடர்ந்து பிரிட்டனின் எல்லா வகையான உதவி ஒத்தாசைகளுடனும், அவர்களது படைபலத்துடனும் யூதர்கள் பல நாடுகளிலிருந்து வந்து குடியேறலாயினர். ஆரம்பத்தில் அவர்கள் அமைதி காப்பவர்கள் போல் வந்தாலும், வெகு சீக்கித்தில் அவர்கள் பயங்கரவாதிகளாயினர்.

அவர்களுள் தோற்றுவிக்கப்பட்ட இரு பயங்கரவாத அமைப்புகளான இர்கம், ஹகானாத் என்பவை முஸ்லிம்களை கொலை செய்வதை தமது இலட்சியமாகக் கொண்டு செயற்பட்டன.

1948 ஜனவரி ஆகும் போது முஸ்லிம்களுக்குச் சொந்தமான 400க் கும் அதிகமான கிராமங்கள் யூத சியோனிஸவாதிகள் வசமாயின. அவற்றில் வாழ்ந்த முஸ்லிம்களும் பெரும்பாலோர் கொலை செய்யப்பட்டதுடன் எஞ்சியவர்கள் அகதிகளாயினர்.

இத்தகைய கொடுமைகள் நிகழ்ந்து வரும் போது மறுபக்கம் யூத நாடு உருவாக்கப்படுவதற்கான அறிக்கைகள் மற்றும் ஆவணங்கள் அரங்கேற்றப்பட்டன.

### அமெரிக்க மற்றும் பிரிட்டன் ஆதரவு

கி.பி.1922 ல் அமெரிக்கா அதன் இரு சபைகளிலும் யூதர்களுக்கான ஒரு நாடு பலஸ்தீன் மண்ணில் அமைவதற்கு ஆதரவான கூட்டுத் தீர்மானங்களை நிறைவேற்றியது. அப்போது அமெரிக்கா பன்னாட்டுச் சபை யில் அங்கத்துவ நாடாக இருக்கவில்லை. அந்தநிலையில் அந்த தீர்மானங்களை கி.பி.1924 ல் நடைபெற்ற ஆங்கிலோ அமெரிக்கா மாநாடு ஒன்றில் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றுக் கொண்டது.

1939-5-17 ல் பிரிட்டனின் காலனித்துவ நாடுகள் தொடர்பான விவகாரங்களுக்குப் பொறுப்பதிகாரியான மெல்கம் மெக்டொனால்ட் என்பவர் சமர்ப்பித்த வெள்ளையறிக்கை ஒன்றில் இன்னும் 10 ஆண்டுகளுள் தமது நாடு யூதர்களையும் பலஸ்தீன அரபு மக்களையும் கொண்ட சுதந்திர பலஸ்தீன் நாடொன்றை அமைக்கும் ஆவல் கொண்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

இது உண்மையில் பலஸ்தீனைக் கூறு போடும் திட்டமாகும். முழுக்க முழுக்க பலஸ்தீன மக்களுக்குச் சொந்தமான பலஸ்தீன மக்களுக்குச் சொந்தமான பலஸ்தீன், வந்தேறு குடிகளான யூதர்களுக்கும் பங்கு வைக்கும் நிலை இதன் மூலம் உருவாகிறது. இவ்வறிக்கை வெளியிடப்பட்ட போது பலஸ்தீனில் குடியேறியிருந்த வெளிநாட்டு யூதர்கள் எண்ணிக்கை 445,000 ஆகும்.

உண்மையில் பலஸ்தீன் துண்டாடப்படுவதில் ஆரம்பம் முதல் இறுதிவரை முழு மூச்சாக யூதர்கள் சார்பாக ஈடுபாடு கொண்ட நாடு பிரிட்டன் என்பதை எவரும் மறுக்க முடியாது. உலகின் பல நாடுகளில் பிரச்சினைகள் பல தோன்றுவதற்குக் காரணமாக இருந்ததும் பிரிட்டனே!

### ஐ.நா.சபையின் போக்கு

ஐக்கிய நாடுகள் சபை அதன் பொதுச் சபையில் நிறைவேற்றிய எண் 181(II) தீர்மானத்திற்கொப்ப 1947 நவம்பர் 29 ம் நாள் பலஸ்தீன பூமி அதன் பூர்வீகக் குடிகளான பலஸ்தீனருக்கும் (45.53%) நிலம், எங்கோ இருந்து வந்த யூதர்களுக்கும் (56.47% நிலம்) இடையில் பிரித்துக் கொடுக்கப்படுவதை அங்கீகரித்தது. அத்துடன் ஜெரூஸலம் நகர் சர்வதேசமயமாய் அமைய வேண்டும் என்றும் அத்தீர்மானம் கூறிற்று.

இது ஐநா சபையின் அப்பட்டமான துரொகமாகும். அது அதன் அங்கத்துவ நாடுகள் மத்தியில் நியாயமாக நடக்க வேண்டியிருக்க பலஸ்தீன் விவகாரத்தில் படுமோசமாக நடந்து கொண்டுள்ளது. காஷ்மீர், கிழக்கு திமோர் மற்றும் நாடுகளிலும் இஸ்ரேல் உருவான பின் இன்று வரையிலும் ஐ.நா. சபையின் போக்கு நியாயம் தவறிய வழியிலேயே அமைந்துள்ளது. இதனை முஸ்லிம்களின் நம்பிக்கைக்குரிய சபையெனக் கொள்வது விஷப் பாம்பை கழுத்தில் போட்டுக் கொண்டு உயிராபத்து வராது என நினைப்பதற்கு ஒப்பான செயலாகும்.

### யூத நாடு உதயம்

இவ்வாறு பலஸ்தீனை துண்டாட கபட நாடகங்கள் அரங்கேறி வரும் வேளை, பலஸ்தீனில் நிலைகொண்டு அக்கிரமம் புரிந்து வந்த பிரிட்டிஷ் படைகள் வாபஸ் பெற்றுச் செல்லும் காலம் நெருங்கி வந்தது. அவர்கள் செல்ல வேண்டிய காலம் 1948 ஜனவரி மாதமாகும். எனினும் சிற்சில காரணங்களைக் காட்டி அந்த கால எல்லையை பிற்போட்டு 1948-5-14 ல் செல்வதற்கு ஆயத்தமானது.

அதன்படி அந்தத் தினத்தில் பிரிட்டிஷ் படை வாபஸ் பெறப்பட்டது. அன்று வரை பிரிட்டிஷ் தூதுவராக பலஸ்தீனில் கடமையாற்றிய சர். அலன் கன்னின்கம் (Sir Alam Canningham) என்பவரும் தன் தாய்நாடு திரும்பினார். அன்றிரவு 10 மணியளவில் யூத தேசிய சபை இரண்டும் இணைந்து இஸ்ரேல் என்றொரு நாடு உருவாக்கப்பட்டது என்பதை உலகுக்கு அறிவித்தன. அன்று அதன் ஜனாதிபதியாக ஸாயிம் வெய்ஸ்மேன்னும், பிரதமராக டேவிட் பென் குரியனும் தெரிவு செய்யப்பட்டனர்.

இப்படி பலஸ்தீன் துண்டாடப்படுவதை அன்று 56 நாடுகளின் நலன்களை கவனிக்கவென உருவாக்கப்பட்ட ஐ. நா. சபை 33 ஆதரவு வாக்குகளுடன் அங்கீகரித்து 13 நாடுகள் எதிர்த்து வாக்களித்தன. 10 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

### அங்கீகாரங்கள்

இஸ்ரேல் உருவாகி சில நிமிடங்களில் அதை அங்கீகரித்து ஆசிர்வதித்தார் அமெரிக்காவின் அன்றைய ஜனாதிபதி ட்ரூமென். அடுத்து அதை அங்கீகரித்த நாடு சோவியத் யூனியனாகும். அது 18-5-1948 ல் நடைபெற்றது. அதையடுத்து 25-01-1949 ல் இஸ்ரேலிய தேர்தல் இடம் பெற்று ஓர் அரசு உருவானவுடன், அதே மாதம் 31 ல் அமெரிக்க அரசு அதற்கு முறையான அங்கீகாரம் வழங்கியது.

இஸ்ரேலிய நாடாளுமன்றத்திற்கு நெஸ்ஸட் எனப் பெயரிடப்பட்டது. இதைத் தொடர்ந்து ஏராளமான சர்வதேச பொருளாதார மற்றும் அமைப்புக்களில் ஐ. நா. சபை, அமெரிக்கா, பிரிட்டன் ஆகியவற்றின் சிபாரிசுடன் அங்கத்துவம் வழங்கப்பட்டது. அடுத்து 10 ஆண்டுகளுக்குள் 63 நாடுகள் அதற்கு அங்கீகாரம் வழங்கின.

இன்று இஸ்ரேல் உலகின் பலம் வாய்ந்த நாடொன்றாக பரிணமித்துள்ளது. அந்த நிலைக்கு அதைக் கொண்டு வருவதில் அமெரிக்க அரசு அதிக சிரத்தை எடுத்துக் கொண்டது. உள்ளூர அமெரிக்காவுக்கு மத்திய கிழக்கில் தனது நிலையான ஆதிக்கத்தை வைத்துக் கொள்ள வேண்டும் என்பது தான் பிரதான காரணியாகும்.

### யூத சியனிசத்தின் இலட்சியங்கள்

இஸ்ரேலின் - யூத சியோனிஸத்தின் ஆதிக்க வெறிப்பாதையில் அது அடைய விரும்பும் இன்னும் பல அம்சங்கள் உள்ளன. அவற்றை இப்படி வகுத்து நோக்கலாம்.

பரந்து விரிந்த யூத ராஜ்ஜியமொன்றை நிறுவுவது, அதன் எல்லைக்குள் தற்போது தன்னுள் வைத்துக் கொண்டுள்ள காஸா, கோலான் குன்றுப் பகுதிகளுடன் சஊதி அரேபியாவின் மதீனா உள்பட பெரும் பகுதி, ஈராக்கின் 90% பகுதி, குவைத், சிரியா, துரக்கியின் ஒரு பகுதி, ஜோர்டான், லெபனான், சினாய் பாலைவனம், எகிப்தின் ஒரு பகுதி என்பனவும் அடங்கும். இதை சியோனிஸ அமைப்பு பாம்பு வட்டமிட்டதாக வரைந்து காண்பித்துள்ளது.

மஸ்ஜிதுல் அக்ஸாவை தரைமட்டமாக்கி விட்டு அந்த இடத்தில் அவர்கள் கனவு காணும் ஐஹக்கல் சுலைமானியை நிர்மாணிப்பது.

ஜெருஸலம் இஸ்ரேலின் தலைநகராக்குவது

இவற்றை அடைவதுடன் இறுதியாக அவர்கள் அடைய விரும்பும் இலக்கு இந்த உலகை அவர்களின் பிடிக்குள் கொண்டு வருவதாகும். அதன் மூலம் பொருளாதார நோக்கத்தை நிறைவு செய்வதாகும்.

உலக யூத அமைப்பின் தலைவர் நெக்ஹூ ம் கோல்ட்மேன் (நேஉாரஅ புழடனஅயல) என்பவர் கனடாவில் நடைபெற்ற ஒரு மாநாட்டில் அதை இப்படி விவரிக்கிறார்.

### யூதரின் இறுதி இலக்கு!

யூதர்கள் தவ்ராத் வேதத்திலும் தமது மதத்தினதும் உயர்வு கருதி பலஸ்தீனை தமது நாடாக்கிக் கொள்ள நினைக்கவில்லை. அதன் கடற்பரப்பிலிருந்து பெறப்படும் கனிப் பொருட்கள் மூலம் வருடம் ஒன்றுக்குக் கிடைக்கும் மூன்று பில்லியன் டாலர்களுக்காகவோ, அமெரிக்காவை விடவும் 20 மடங்கு அதிகமான எண்ணெய் சேமிப்பைக் கருத்திற் கொண்டோ பலஸ்தீனைப் பெற்றுக் கொள்ள நாடவில்லை. மாறாக, பலஸ்தீன் ஐரொப்பா, ஆசியா, ஆப்ரிக்கா ஆகிய பரந்த பூமிகளுக்கிடையிலான போக்குவரத்துப் பாதையில் அமைந்திருப்பதும், எல்லா வகையான உலக சக்திகளுக்கிடையில் மத்தியத்தளமாகக அமைந்திருப்பதும், பணப் புழக்கத்தின் கேந்திர ஸ்தானமாக அமைந்திருப்பதும் தான் பலஸ்தீனை நமது நாடாக ஆக்கிக் கொண்டத்ன நோக்கம் ஆகும். (Hamas, The Historical Roots The Pact, page 16).

### இஸ்லாமியப் போராட்டம்

உண்மையில் யூத சியனிஸவாதிகள் இன்று செய்து வருவதும் இனி செய்யப் போவதும் இந்த இலக்கை அடைந்து கொள்வதற்கான கொடுஞ் செயலாகும். இடையிடையே ஒஸ்லோ ஒப்பந்தம் என்றும், கேம்ப் டேவிட் என்று வரும் ஒப்பந்தங்களும், மற்றும் சமாதான ஏற்பாடுகளும் அவர்கள் தம்மை ஸ்திரப்படுத்திக் கொள்ளவும், தொடர்ந்து உலகுக்குத் தொல்லை தரவும் உதவுமே தவிர வேறு எந்த முன்னேற்றமும் நியாயத்தின் அடிப்படையில் வரவே வராது.

இந்நிலையில் இன்று இஸ்லாமிய அமைப்புக்கள் முன்னெடுத்துச் செல்லும் சத்திய வழியிலான போராட்டத்தைத் தவிர பலஸ்தீனை மீட்டெடுக்க வேறு வழியில்லை. அத்தகைய போரட்டமொன்றை, தாம் இழந்ததை மீளப் பெற எடுக்கப்படும் முயற்சிகளை பயங்கரவாதம் என எவரும் சொல்வராயின், அவர் எவ்வளவு தூரம் அமெரிக்க மற்றும் மேற்கத்திய ஊடகங்கள் மூலம் மூளைச் சலவை செய்யப்பட்டுள்ளார் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

### ஹமாஸ் : சில வரலாற்றுப் பதிவுகள்

ஓர் இனம் நசுக்கப்படும் போது நசுக்கப்பட்டவர்கள் அனைவரும் ஒன்று சேர்கிறார்கள். இந்த ஒன்றிணைப்பு ஓர் அமைப்பினையும் ஒரு தலைமைத்துவத்தினையும் ஏற்படுத்தி விடுகின்றது. இப்படித்தான் ஹமாஸ் இயக்கத்தின் தோற்றமுமாகும். எல்லா இயக்கத்திற்கும் அவை உருவாவதற்கான காரணங்களும் சூழலும் உண்டு. ஹமாஸ் அது கொண்டு பெயரைப் போலவே இஸ்ரவேலர் பறித்தெடுத்த தாய்நிலததை மீட்டெடுப்பதற்கான இஸ்லாமிய எதிர்ப்பு இயக்கமாகும். இஸ்லாமிய எதிர்ப்பு இயக்கம் என்னும் பொருள் தரும் ஹரகதுல் முகாவமதுல் இஸ்லாமிய்யா என்பதன் சுருக்கமாகும்.

### தோற்றம் :

ஹமாஸ் அமைப்பு சட்டபூர்வமாக இஸ்ரேலில் 1978 ல் ஷேக் அஹ்மத் யாஸீன் அவர்களால் பதிவு செய்யப்பட்டதாகும். அப்போது அல் மஜ்மஃ அல் இஸ்லாமி எனும் பெயரில் இஸ்லாமிய போதனைகள் மற்றும் சமூக சேவைகளுக்கான அமைப்பாகவே இயங்கி வந்தது. இதனால் நிறைய ஆவலர்களைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. இது இந்திபாழாவுக்கு முந்திய கட்டமாகும். 1988 ல் இது ஹமாஸ்

என்று அழைக்கப்படலாயிற்று. 1989 ல் ஹமாஸ் இன்திபாழாவை அறிமுகப்படுத்திய அச்சமயம் தனது பயணத்தின் இரண்டாம் கட்டத்திற்கு அது நகர்ந்திருக்கிறது.

இரண்டாம் கட்டத்தில் ஆக்கிரமிப்பாளர்களான இஸ்ரேலை ஆயுத ரீதியாக எதிர்த்தது. இதனையே அது இன்திபாழா என அழைக்கிறது. இஸ்லாமிய பலஸ்தீனை உருவாக்குவதில் ஆயதப் போராட்டத்தினை மேற்கொள்ள வேண்டிய தவிர்க்க முடியாத நிர்ப்பந்தத்திற்கு அது உள்ளாகியது.

ஹமாஸ் வளைகுடா யுத்தத்தின் போது பயங்கரவாத நடவடிக்கையினை எதிர்த்து பலஸ்தீனிலும் இஸ்ரேலின் உள்ளும் இயங்கும் முன்னணி அமைப்பாகும். இன்று பதாஹ் இயக்கத்திற்குப்பின் ஆக்கிரமிப்பாளர்களை எதிர்ப்பதில் அதிக பலம் மிக்கதாகும்.

அதன் வளர்ச்சிக் கட்டத்தில் தற்கொலையாளிகளை அறிமுகம் செய்திருக்கிறது. தற்கொலை என்பதை விட ஷஹீத்கள் என்று அழைப்பதே மிகப் பொருத்தமாகும். ஷஹீத்கள் எனும் போது எமக்கும் அவர்களுக்குமிடையிலான ஓர் ஆத்மீக உறவு நெருக்கத்தைக் காண முடிகிறது.

## ஹமாஸின் தலைமைத்துவம் :

ஹமாஸின் ஸ்தாபகர் ஷேக் அஹ்மத் யாஸீன் அவர்களே 1989 வரை தலைமை வகித்து வந்தார்கள். இருந்தும் அவர்களே ஹமாஸ் இயக்கத்தின் ஆத்மீகத் தந்தையாக இருந்து வருகிறார்கள். வெளியீடுகள், நிதி, வியாபாரம், வெளிநாட்டு உறவு, அத்துமீறல், பயங்கரவாத நடவடிக்கைகள் என்பவற்றை மேற்பார்வை செய்தல் ஆகியன ஷேக் அஹ்மத் யாஸீன் தலைமையில் நடைபெற்றன. ஷேக் யாஸின் அவர்கள் 1936 ல் ஜோரா எனும் கிராமத்தில் பிறந்து, 14 வயதில் உதைபந்தாட்டத்தில் ஒரு கால் காயமுற அக்காலினால் எதையும் செய்ய முடியாது போனது. உயர்கல்வி தகைமையோடு ஆசிரியர் தொழிலில் ஈடுபட்டவர், எகிப்தில் தலைமையிடமாக் கொண்டு இயங்கி வந்த இஹ்வானுல் முஸ்லிமீனின் அங்கத்துவத்தை 1955 ல் பெற்றுக் கொண்டார். 1966 ல் சிறைவாசம் அனுபவித்தார். ஷேக் அவர்கள் சிறைபிடிக்கப்பட்டு 1984 ல் இஸ்ரேலிய அரசாங்கத்தின் கைதிகள் பரிமாறும் திட்டத்தின் கீழ் விடுவிக்கப்பட்டார்.

அடுத்த தலைமைத்துவத்தினை மூஸா முஹம்மத் அபூ மர்ஸூ க் அவர்கள் ஏற்றார்கள். அபூ மர்ஸூ க் 1951 ல் காஸா பள்ளத்தாக்கில் உள்ள ரபாஹ் அகதிமுகாமில் பிறந்தவர். எகிப்தில் பொறியியல் படிப்பினைமுடித்துக் கொண்டு காஸாவுக்கு வந்தார். அஹ்மத் யாஸின் அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவராக இருந்தார். 1988 ல் ஹமாஸ் உருவாகும் போது அதன் ஆரம்ப அங்கத்தவர்களுள் ஒருவராகவும் இருந்தவர்.

அமெரிக்காவில் 1981-82 காலப்பகுதியில் பொறியியலைத் தொடர்ந்தும் பயிலும் போது தனது குடும்பத்தோடு வேர்ஜீனியா போல்ஸ் ல் வாழ்ந்து வந்தார். 1989 ல் ஹமாஸின் அரசியல் பிரிவுக்குத் தலைவரானார். முடிவெடுப்பதிலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறார். அபூ மூஸா 1995 ஜு லை 25 ல் அமெரிக்காவில் வைத்துக் கைதானார். அமெரிக்க நீதிபதிகள் மே 1996 ல், இஸ்ரேலுக்கு நாடு கடத்துவதற்கான தீர்மானத்தை நிறைவேற்றினர். எனினும் அவர் ஜோர்தானுக்கே அனுப்பி வைக்கப்பட்டார். இது மே 1997 ல் நிகழ்ந்தது. இவை ஒன்றும் அவரது இஸ்லாமிய நடத்தையையும், இயக்கத்தையும் தடுக்கவில்லை. அவை மேலும் மேலும் உறுதியையும் மனவலிமையையும் வழங்கியுள்ளன.

## ஹமாஸூ ம் அதன் கட்டமைப்பும்

ர்ளகக் கட்டமைப்பு : இதுவே தஃவா, அறிவு விருத்தி என்றழைக்கப்படுகிறது

ர்திபாழாவுடன் கூடிய ஜனரஞ்சக செயற்பாடு

நுகாப்பு : இது அம்ன் என வழங்கப்படுகிறது. இப்பிரிவு சந்தேகத்துக்கு இடமான நடவடிக்கைகள் தொடர்பாக தகவல்கள் திரட்டி அதனை அதிர்ச்சிக் குழு விடம் ஒப்படைக்கிறது. அது அவ்விசயத்தை விசாரித்து சந்தேகத்துக்கிடமாக நடந்து கொள்பவர் தொடர்பில் நடவடிக்கை எடுக்கிறது.

ளியீடுகள் : இது அல்இஃலாம் என வழங்கப்படுகிறது. செய்திமடல், பரப்புரை, உத்தியோகப்பூர்வ அறிக்கைகள் என்பவற்றை வெளியிடுகிறது.

இராணுப்பிரிவு

அல் முஜாஹிதூன் அல் பலஸ்தீனியூன் எனும் பெயரில் இராணுவப் பிரிவை ஹமாஸ் கொண்டுள்ளது. இதுவே இஸ்ரேலிய இராணுவத்தின் நிலைகளைத் தாக்கி வருகிறது. இப்பிரிவு 1982 ல் உருவாக்கப்பட்டதாகும். இந்திபாழாவோடு இது விஸ்தரிக்கப்பட்டு தொடர்ந்தேர்ச்சையான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன குறிப்பாக காஸாப் பகுதியின் வடபகுதியிலே அதிக தாக்குதல்கள் இடம் பெறுகின்றன.

அல்மஜ்த் எனும் பாதுகாப்புப் பிரிவு

1986 ல் அம்ன் பிரிவு 1986 ல் ஷேக் யாஸீன் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது. இஸ்லாம் தடைசெய்த போதைப் பொருட்கள், மோசடி போன்றவற்றில் ஈடுபடுவோரை கண்காணிப்பதற்கென உருவாக்கப்பட்ட இவ்வணி பின்னர் முஜாஹிதுகளுடன் இணைக்கப்பட்டது.

இஹ்வான்களுடனான கருத்தியல் உறவு

ஹமாஸ் கருத்தியலிலும், வழிமுறைகளிலும் எகிப்தில் இமாம் ஹஸனுல் பன்னாஹ் (ரஹ்) தோற்றுவித்த இஹ்வானுல் முஸ்லிமீன் எனும் இஸ்லாமிய இயக்கத்தினை ஒத்ததாகும். இஸ்லாமியப் பலஸ்தீன் உருவாகும் வரை ஹமாஸு ம் இருக்கும். நசுக்கப்பட்டவர்கள் ஆட்சிக்கு வருவார்கள். அவர்கள் நீதியையும் மனிதத்தையும் இந்தப் பூமியில் ஏற்படுத்துவார்கள்.

யார் இந்த யாஸிர் அரபாத்?

முஹம்மத் என்ற இயற்பெயரைக் கொண்ட யாசிர் அரபாத் ஆகஸ்டு 01, 1929 ம் ஆண்டு பிறந்தார். ஜெரூஸலம் நகரில் பிறந்ததாகவும் அவர் குறிப்பிட்டாலும் அவர் பிறப்பால் எகிப்தின் தலைநகர் கெய்ரோவைச் சேர்ந்தவர் என்ற கருத்தும் உண்டு. கெய்ரோ பல்கலைக்கழகத்தில் பொறியியல் பட்டப்படிப்பை முடித்தார். 1948 ல் பலஸ்தீன் - இஸ்ரேல் பிளவுக்கு முன்னரே பலஸ்தீனுக்குள் ஆயதங்களைக் கடத்திக் கொண்டு வரும் வேலையைச் செய்து வந்தார்.

1956 ல் அல்பதாஹ் இயக்கத்தை ஆரம்பித்தார். இவ்வியக்கம் ஆரம்பிக்கப்பட்ட புதிதில் எகிப்து, சிரியா, ஜோர்தான் போன்ற நாடுகள் அதற்கு ஆதரவு வழங்கவில்லை. 1968 ல் முஸ்லிம் நாடுகள் பலவற்றின் ஆதரவுடன் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவரானார். சுமார் 20 வருடங்களாக இஸ்ரேல் மீது மிக உக்கிரமமான தாக்குதல்களை அரபாத்தின் நடத்தியது. இது தொடர்பாக அப்போது இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவரும், தற்பொழுது பிரதமராக உள்ளவருமான ஏரியல் ஷேரோன் (1995) குறிப்பிடுகையில்,

நாஸிகளுக்குப் பின்னர் அரபாத்தை விட யூதர்களின் இரத்தத்தைப் பூசிக் கொண்ட வேறு ஒருவரை எனக்குத் தெரியாது என்றான்.

ஆனாலும் 1988 ல் இஸ்ரேலை இறைமையுள்ள அரசாக ஏற்றுக் கொண்டதாக அறிவித்து முழு முஸ்லிம் உம்மத்தின் மீதும் கரிபூசி, பலஸ்தீனப் போராட்டத்தையே கொச்சைப்படுத்தினார். அதுவரைக்கும்

பலஸ்தீனப் பயங்கரவாதத்தியாகத் தெரிந்த அரபாத், வெகுவிரைவில் அமெரிக்கா முதலிய நாடுகளுக்கு நெருங்கி நண்பரானார்.

1993 ல் இஸ்ரேலியப் பிரதமர் யிட்ஸக் ரபினுடன் ஓஸ்லோ ஒப்பந்தத்தில் கைகெழுத்திட்டு புனித பூமியை இஸ்ரேலுக்குத் தாரை வார்த்து விட்டு 1996 ல் பலஸ்தீனின் மேற்குக் கரை, மற்றும் காஸா வை உள்ளடக்கிய பலஸ்தீன அதிகார சபையின் ஜனாதிபதி ஆனார். இந்த ஒப்பந்தத்தைச் செய்து கொண்டதன் மூலம், அரபாத், யிட்ஸக் ராபின், இஸ்ரேலின் வெளிநாட்டமைச்சர் ஷிமோன் பெரஸ் ஆகியோருக்கு 1994 ம் ஆண்டு சமாதானத்துக்கான நோபல் பரிசு கிடைத்தது. ஒஸ்லோ ஒப்பந்தத்தை முன்னின்று நடத்திய நாடு நோர்வே என்பது குறிப்பிடத்தக்கது.

பலஸ்தீன அதிகார சபை தோற்றுவிக்கப்பட்டதன் பின்னர் விடுதலைக்காகப் போராடும் முஜாஹிதுகள் மீதான அரபாத்தின் அடியாட்களது கெடுபிடிகள் அதிகமாயின. முஜாஹிதுகளைக் கைது செய்தல், அவர்கள் பற்றி தகவல்களை இஸ்ரேலியர்களுக்கு வழங்குதல் போன்ற கைங்கரியங்கள் பலஸ்தீன அதிகார சபையின் இஸ்ரேலிய விசுவாசத்தை வெளிப்படுத்தி நிற்கின்றன. என்ன தான் ஆக்கிரமிப்பாளர்களுக்கு இசைந்து நடந்த போதும் அண்மையில் அராபத்துக்கு ஏற்பட்ட கையறு நிலையை முழு உலகமும் கண்டு கொண்டது.

அது இறைவனின் திருவசனத்தை மெய்ப்பிப்பதாக உள்ளது, இத்தகையோருக்கு இம்மையிலும் வேதனை, மறுமையிலும் அவர்களுக்கு வேதனை தான்..!

பாலஸ்தீன மண்ணிலிருந்து.. ..!

ஒரு கண்ணீர்க் கடிதம் !

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரக்காதுஹு .

அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.

அவனுக்கே நன்றிகளனைத்தும். எம்மை அவன் வீர மரணத்திற்கென்றே தேர்ந்தெடுத்திருக்கின்றான். அது ஓரருள். அவன் அருள்களை எம்மீது பொழிந்தான். நன்றிகள்.., நன்றிகள்.., அனைத்தும் உனக்கே யா அல்லாஹ்!

உலகெங்கும் பரந்து வாழும் இஸ்லாமியச் சகோதரர்களே!

தேகாரோக்கியத்துடனும், நற்சுகத்துடனும் இருக்கும் நிலையில் இக்கடிதம் உங்களை வந்தடைய வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம். துள்ளிப் பாயும் குழந்தைகள் மனைவியின் உதட்டில் பூக்கும் புன்னகை, நண்பர்களின் கேளிக்கைகள் மக்கள் மத்தியில் மகிழ்வோடு இருக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன்.

இஸ்லாமியச் சகோதரர்களே!

எம்மிடம் நற்சிந்தனை ஒன்றிருக்கிறது. கொஞ்ச நேரம் ஒதுக்கி நீங்கள் அதனை வாசிப்பீர்கள் என நினைக்கிறோம். நாம் அதனைப் பேனா மையினாலல்ல, எழுதியது இதய மையினால் சகோதரர்களே! அனுமதிப்பீர்களா? கொஞ்சம் நாம் உங்களைக் கண்டித்தால்!! உங்கள் இரத்தத்தோடு கலந்திருக்கும் **Coca Cola** வைக் காட்டித் தந்தால்..!

நீங்கள் செய்துவிட்டவற்றை நீங்கள் செய்வீர்களென நாம் எதிர்பார்க்கவில்லை. ஓடுகின்ற எங்கள் இரத்தக் காட்சிகள் உங்களைக் கவரும் கண்காட்சிகளென நினைத்திருக்கவில்லை. எங்கள் யுவதிகள், சகோதரிகள், பிறர் கையினால் அல்ல தம் கையினாலேயே மாயும் காட்சிகள் உங்களை மகிழ்விக்கும் என நினைக்கவில்லை. துஹாரா, ஈமான், பிலால்..,, போன்ற பச்சிளங் குழந்தைகளின்

ரணக் காட்சிகளை கலை ரசனையோடு கண்டுகளித்திருப்பீர்கள் என நாம் நினைக்கவில்லை. உங்களிடம் நாம் இந்தளவு மலிவானவர்கள் என நினைக்கவில்லை. எம்மைப் பற்றி யோசிப்பதில் கூட நீங்கள் உலோபிகளானீர்கள். அற்பச் சில்லறையிலுமா நீங்கள் எமக்குக் கஞ்சத்தனம் காட்டுகிறீர்கள்? எமக்கெதிராக யூதனுக்கு உதவுகின்றீர்கள். எம்மை விடவும் உங்களுக்கு **Pepsi** யும் **Coca Cola** வும் பெறுமதி மிக்கவை என நாம் தெரிந்திருக்கவில்லை. அமெரிக்கக் கோபுரங்கள் இடிந்த வேளை எழுந்த உணர்ச்சிகள் எம் இரத்தங்களுக்கு முன்னால் நுரையாய் இறங்கி விடும் என நாம் நினைக்கவில்லை. சத்தியமாய் நினைக்கவில்லை.. .. நீங்கள் இப்படிச் செய்வீர்கள்என்று நாம் நினைத்திருக்கவேயில்லை. ஏன் தெரியுமா? நாம் உங்களை நேசிக்கின்றோம். இது தான் எமது சிந்தனை எழுதுகையிலேயே எத்தனை இரத்தத் துளிகள் மண்ணை முத்தமிட்டிருக்கும் என நாம் அறியோம். நாம் உங்களைக் கஷ்டப்படுத்தியிருக்க மாட்டோம் என நினைக்கிறோம். மன்னியுங்கள். உங்களைக் கஷ்டப்படுத்தியிருந்தால் மீண்டும் உங்கள் கேளிக்கைகளில் மூழ்குங்கள். நிச்சயமாக நாம் எமது ரப்பை எம்மிடம் கண்டு கொண்டோம். அவன் உங்களுக்கு மேலிருப்பதைக் கண்டோம். இது தான் எமது வழி - புனிதப் போர்!

அதில் வெற்றி இல்லையேல் வீரமரணம் !!

(நன்றி முஜ்தமஃ, தமிழில் : பைசல்).

அமெரிக்க - இஸ்ரேலிய உற்பத்திப் பொருட்கள் சில :

1. Coca Cola
2. Pepsi
3. McDonalds உற்பத்திகள்
4. KFC உற்பத்திப் பொருட்கள்
5. Pizza
6. Nike
7. Adidas

இஸ்ரேல் ஒரு தீவிரவாதநாடு

ஜெனின் அகதிமுகாம் படுகொலைக்கான சாட்சியங்கள்

அண்மையில் பாலஸ்தீனத்தில் ஜெனின் என்னும் இடத்தில் அமைந்துள்ள அகதி முகாமைத் தாக்கி அதில் உள்ளவர்களை கூண்டோடு அழித்த கொடுமையை இஸ்ரேல் செய்தது. இறந்தவர்களை எரித்தும், கூட்டமாகப் புதைத்தும், தடயங்களே இல்லாமல் செய்த வரலாற்றுக் கொடுமை ஒன்றை நிகழ்த்தியது. அங்கு நடந்த படுகொலைகள் உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ஜெனின் படுகொலை தொடர்பான சாட்சியங்களையோ, தகவல்களையோ பெற்றுக் கொள்ள முடியாத வண்ணம் தடைகளை இஸ்ரேல் ஏற்படுத்தியது. ஏன் அவசரப் பிரிவு மருத்துவர்களையோ, பத்திரிக்கையாளர்களையோ என எவரையுமே அந்த அகதி முகாம் பக்கம் நெருங்கக் கூட விடாமல், சாட்சியங்களை அழிப்பதிலேயே இஸ்ரேல் குறியாக இருந்தது உலகத்தின் கண்டனத்திற்குள்ளாகியது. ஜெனின் குறித்து சில முக்கியப் பிரமுகர்கள் தெரிவித்த கருத்துக்களை இங்கு தருகின்றோம். இது ஒன்றே இஸ்ரேல் தீவிரவாத நாடு என அறிவிப்பதற்குப் போதுமான சாட்சியங்களாக உள்ளன.

**William Burns - (மத்திய கிழக்கிற்கான அமெரிக்கத் தூதுவர்).**

நாம் காண்பது பயங்கர மனித அழிவொன்றையே என நினைக்கின்றேன். ஜெனின் முகாமில் நடந்தேறிய சம்பவங்கள், அப்பாவி பாலஸ்தீனப் பொதுமக்களுக்கு மிகப் பெரிய துன்பத்தை விளைவித்துள்ளது. (Reuters 20/4/2002)

**Migvel Angel - (ஐரோப்பிய யூனியன் தூதுவர்)**

நான் பெரிதும் அதிர்ச்சி அடைந்துள்ளேன். நான் கண்டவற்றைப் பற்றிய மிகப் பெரிய மனப்பதிவை சுமந்து செல்கின்றேன். இது ஒரு துயர் நிறைந்த மனித அழிவே!

ஜெனிலுள்ள பலஸ்தீன அகதி முகாமின் அழிவு, மத்திய சமாதான தூதுவர்களின் முயற்சிகளின் தோல்வியையே எடுத்துக் காட்டுகின்றது.

இவ்வாறான நிகழ்வுகளை தவிர்ப்பதற்காகவும், இப்பகுதியில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காகவும் ஓயாது வேலை செய்து கொண்டிருக்கும் என்னைப்போன்ற மனிதர்களுக்கு இதுஒரு தோல்வியே! எதிர்காலத்தில் இதை விட அதிகமாக நாம் வேலை செய்ய வேண்டியுள்ளது. (AFP 29/4/2002)

**Terje Roed - Larsen – (ஐ. நா. வின் விசேஷ தூதர்)**

இது முற்றுமுழுதாக, ஏற்றுக் கொள்ள முடியாததும், நம்ப முடியாததுமான கோர நிகழ்வாகும். அது (ஜெனின்) முழுதாகவே அழிக்கப்பட்டு விட்டது. ஒரு பூகம்பம் தாக்கியழித்தது போல் காட்சி தருகின்றது.

பதினொரு தினங்களாக தேடுதல் குழுக்களுக்கும், மீட்புக் குழுக்களுக்கும இஸ்ரேல் அரசு வர அனுமதிக்காதிருந்தது எந்த விதத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாததொன்றாகும். இது மனித நீதிக்குப் பொருந்தாததொரு விசயமாகும்.

யுத்தப் பிராந்தியங்களுக்கும், பூகம்பம் நிகழ்ந்த பகுதிகளுக்கும் சென்று வந்த நிபுணர்கள் எம்மிடம் இருக்கின்றார்கள். எனினும், இது போன்ற ஓர் அழிவை நாம் கண்டதில்லை என அவர்கள் கூறுகின்றார்கள். (BBC18/4)

**Peter Hansen (பாலஸ்தீன அகதிகளுக்கான ஐ. நா. ஆணையாளர் ஜெனரல்)**

மேற்குக் கரையிலிருந்த அகதி முகாமை இஸ்ரேல் உண்மையிலேயே முற்றாக அழித்து விட்டது. அங்கு இடம் பெற்ற பயங்கர மனித அழிவை பலஸ்தீன சந்ததிகள் பல நினைவில் வைத்திருக்கும். ஜெனினில் கண்டது போன்ற மனித துயரத்தை நான் ஒரு போதும் கண்டதில்லை.

ஜெனினுக்கு என்னுடன் வந்த ஸ்விஸ் நாட்டைச் சேர்ந்த நிலநடுக்க ஆய்வாளர் கூட திகைத்து விட்டார். கடந்த பல தசாப்தங்களாக இது போன்றதோர் அழிவை உலகின் எப்பகுதியிலும் தான் கண்டதில்லை எனக் கூறினார். இம்மனிதப் படுகொலைகள் மனித நினைவிலிருந்து என்றும் அகலாது என நினைக்கின்றேன். பலஸ்தீன சந்ததிகள் பல இவற்றின் தாக்கத்தை வைத்திருக்கும். (AFP) 28/4

**Yaffa Yarkoni - (தேசப்பற்றுப்பாடல்களுக்கு பேர்போன இஸ்ரேல் பாடகர்)**

முதுகுக்குப் பின்னால் தம் கைகள் கட்டப்பட்டிருந்த பலஸ்தீன சடலங்களை நான் கண்ட போது, நான் கூறினேன் : ஹொலோகோஸ்ட் (ஜெர்மனியில் யூதர்கள் நாஸிகளால் அழிக்கப்பட்ட நிகழ்வு)

களின் போது அவர்கள் எமக்குச் செய்தது போல் இது இருக்கிறது. நாம் ஹோலோகோஸ்ட்டைத் தாண்டியவர்கள். எம்மால் இப்படிப்பட்ட விசயத்தை எவ்வாறு செய்ய முடிந்தது? (Independent 3/5)

Francis Wurtz (10 ஐரோப்பிய யூனியன் நாடுகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் 19 யூரோ. க்களுக்கான பேச்சாளர்)

யுத்தக் குற்றச் செயல்களுக்கான சகல அடையாளங்களும் இருக்கின்றன. முற்றாக சகிக்க முடியாத பூச்சிய நிலைக்கு அது அரைக்கப்பட்டு விட்டது. ஏதும் மீதியில்லை. திட்டமிடப்பட்ட அழிவு வேலை, துயர் நிறைந்த மனித அழிவு. (AFP)

Gavier Zuniga - Amnesty (பிராந்தியப் பணிப்பாளர்)

மனித உரிமை மீறல்களுக்கும் மனிதாபிமான சட்டங்களின் பயங்கர மீறல்களுக்குமான நம்பத்தகுந்த ஆதாரங்கள் கொள்ள முடியுமான போர்க் குற்றச் செயல்கள், சட்ட விரோத கொலைகள், கொலைகாரப் படையின் அபரிதமான செயற்பாடு, ஹெலிகாப்டர்களால் தாக்குதல் ஆரம்பிக்கு முன் எச்சரிக்கை ஏதும் கொடுக்கப்படாமை...

ஜெனின் அகதி முகாமில் இஸ்ரேல் படையினரின் மனித உரிமை மீறல்களுக்கான ஆதாரங்கள்! தடுத்து நிறுத்தப்பட்ட பலஸ்தீனர்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தியமை, ஜெனினில் சர்வதேச சட்டங்கள் படுபயங்கரமாக மீறப்பட்டுள்ளன என்று பூர்வாங்க அடிப்படையில் நாம் முடிவு செய்துள்ளோம். போர்க் குற்றச் செயல்கள் குறித்து நாம் பேசி வருகின்றோம். (Yahoo.com3/5)

Peter Boukaert - (மனித உரிமை கண்காணிப்புக் குழுவின் மூத்த ஆய்வாளர்)

நாம் ஜெனினில் ஆவணப்படுத்தியுள்ள அத்துமீறல்கள் மிகத் தீவிரமானவை. சில சம்பவங்களில், அவை போர்க் குற்றச் செயல்களாகத் தென்படுகின்றன. அநேக பாரதூரமான மீறல்களுக்கு தனிநபர் பொறுப்பை ஊர்ஜிதம் செய்வதற்கு குற்றப் புலனாய்வுகள் தேவைப்படுகின்றன. இஸ்ரேலிய அரசின் முதல் முக்கிய கடமை இதுவாகும்.

மிகப் பரவலான திட்டமிடப்பட்ட, வேண்டுமென்றே செய்யப்பட்ட முழு மாவட்டத்தையும் தரைமட்டமாக்குகின்ற செயல். இது இஸ்ரேல் அடைய நினைத்த இராணுவ நோக்குக்குப் பொருந்தாத அத்துமீறல் என்பது தெளிவு.

(இவை நம்பத் தகுந்த இணையத் தளங்களை ஆதாரமாகக் கொண்ட தகவல்கள் - நன்றி : எங்கள் தேசம்)

### இஸ்ரேல் தோன்றிய இழி வரலாறு

- யூதர்கள் நபி ஸகரிய்யா (அலை) அவர்களைக் கொலை செய்கிறார்கள்.
- மகன் யஹ்யா (அலை) அவர்களையும் கொலை செய்கிறார்கள்.
- பின்னர் நபி ஈஸா (அலை) அவர்களைக் கொலை செய்ய முயற்சிக்கிறார்கள்.

### கி.பி. 70

உரோம ஆட்சிக்கெதிராக யூதர்கள் புரட்சி செய்கிறார்கள். உரோமச் சக்கரவர்த்தி டைடஸ், அவர்களை அடக்கி, நாட்டை விட்டும் துரத்தி விடுகிறார். யூதர்களின் நீண்ட கால (2000 வருட) வெளியேற்றம் (Diaspora) இதிலிருந்து ஆரம்பிக்கிறது.

கி. பி. 118-138

யூதர்கள் மீள வர அனுமதிக்கப்பட்டும், அவர்கள் வந்து கி. பி. 133 ல் மீண்டும் புரட்சி செய்கிறார்கள். இதனால் பலஸ்தீன் நகரம் முற்றாக அழிக்கப்படுகிறது. யூதர்கள் விரட்டப்பட்டதோடு அடிமைகளாகவும் விற்கப்படுகின்றார்கள்.

கி. பி. 638

அரபு முஸ்லிம்கள் பலஸ்தீனத்தைக் கைப்பற்றுகிறார்கள். கலீபா உமர் (ரலி) அவர்கள் நேரடியாக வந்து ஜெரூஸத்தின் திறவு கோலைக் கையளிக்கிறார்கள். இடையில் (1099 முதல் 1187 வரை) சிலுவை யுத்த வீரர்களின் ஆட்சிக்கு ஜெருஸலம் உட்படுத்தப்பட்டது தவிர்ந்த ஏனைய காலங்களில், உதுமானிய சாம்ராஜ்யம் (இறுதி கிலாபத்) முடிவுக்கு வரும் வரை (1924) முஸ்லிம்களின் பூமியாக பலஸ்தீனம் இருந்து வந்தது.

கி. பி. 1896

ஐரோப்பிய நாடுகளில் யூத இனத்துக்கு எதிரான நடவடிக்கைகளின் விளைவை முன்னிறுத்தி எழுத்தாளன் தியோடர் ஹேர்ஸல், யூதர்களுக்கான ஒரு பூமி தேவை என வலியுறுத்தினான். இதன் அடிப்படையில் சுவிட்ஸர்லாந்தில் யூதத்தலைவர்களும் தனவந்தர்களும், அறிஞர்களும் ஒன்று கூடி முதலாவது ஸியோனிச காங்கிரஸ் மாநாட்டைக் கூட்டி,பலஸ்தீனில் யூத தாயகம் அமைவது பற்றி முன்மொழிந்தனர்.

கி. பி. 1903

இந்த ஆண்டு வரை 25 ஆயிரம் யூதர்கள் பலஸ்தீனில் படிப்படியாகக் குடியேறினர்.

கி. பி. 1914

இந்த ஆண்டுக்குள் மற்றொரு 40 ஆயிரம் பேர் பலஸ்தீனிற்குள் உட்புகந்தனர்

கி. பி. 1922

இந்த ஆண்டில் 11 சதவீதமானோர் யூதர்களாயினர்.

அடுத்த 15 வருடத்துக்குள் 3 இலட்சத்திற்கும் அதிகமானோர் திட்டமிட்டுக் குடியேற்றப்பட்டனர்

கி. பி. 1916

(Sykes-picot) சைக்ஸ் பிகொட் இரகசிய உடன்படிக்கை : பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் இடையில் ரஷ்யாவின் சம்மதத்துடன் கையெழுத்திடப்பட்டது. இது உதுமானிய சாம்ராஜ்யத்தின் கீழிருந்த சிரியா, ஈராக், லெபனான், பலஸ்தீன் ஆகிய அரபுப் பிராந்தியங்களை எவ்வாறு தமக்குள் கூறுபோட்டுக்கொள்வது என்பது பற்றியதே.

இதே கால கட்டத்தில் எகிப்திலிருந்த பிரிட்டானிய கமிஷனர் ஹென்றி மக்மகோன் உதுமானிய ஆட்சியின் கீழிருந்த அரபு மாகாணங்களுக்கு சுதந்திரம் வழங்க பொய் வாக்குறுதியளித்தார்.

கி. பி. 1917

பெல்ஃபோர் (Balfour) பிரகடனம் : 2-11-1917 ஆர்தர் ஜேம்ஸ் பெல்போர் பிரித்தானிய வெளியுறவுச் செயலாளர் பிரித்தானிய யூத சமூகத் தலைவரான லோட் ரொத் சைல்ட் டுக்கு அனுப்பிய கடிதம் ஒன்றின் மூலம் யூத தேசிய தாயகம் பற்றிய உறுதி மொழியை வழங்கினார்.

பலஸ்தீனில் யூத மக்களுக்காக ஒரு தேசிய தாயகத்தை அமைப்பதை மேன்மை தங்கிய அரசரின் அரசாங்கம் சாதகமாக நோக்குகிறது. இந்த நோக்கை அடைந்து கொள்ள உதவுவதற்கு தம்மாலான அனைத்து முயற்சிகளையும் பயன்படுத்தும் அதேவேளை பலஸ்தீனில் வாழும் யூதரல்லாத சமூகங்களின் குடியுரிமை, மத உரிமைகளை பாதிக்கக் கூடிய அல்லது ஏனைய நாடுகளில் யூதர்கள் அனுபவிக்கும் உரிமைகள், அரசியல் அந்தஸ்துகளைப் பாதிக்கக் கூடிய எதனையும் மேற் கொள்ளக் கூடாது என்ற புரிந்தணர்வையும் முன் வைக்கின்றது.

கி.பி. 1918 பிரிட்டான் பலஸ்தீனைக் கைப்பற்றியது

கி.பி. 1929

அரபிகளுக்கும் யூதர்களுக்குமிடையே போராட்டம் துவங்குகிறது. 133 யூதர்கள் அரபிகளின் தாக்குதல்களுக்கு உள்ளானார்கள். அதே வேளை பிரிட்டன் போலிஸ் படை 110 பாலஸ்தீனர்களைக் கொன்றது.

கி.பி. 1930

இரண்டாம் உலக யுத்தத்துக்கு முன் ஐரோப்பாவில் நாஸிகளால் யூதர்களுக்கு எதிராக துன்புறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டதும் அவர்கள் பலஸ்தீனை நோக்கி பாரிய அளவில் அனுப்பப்பட்டனர். இத்திட்டமிட்ட குடியேற்றத்துக்கு எதிராக பலஸ்தீனர்கள் போர்க் கொடி தூக்க ஆரம்பித்தனர்.

கி.பி. 1936

பலஸ்தீனர்கள் பொது வேலை நிறுத்தம் ஒன்றை மேற்கொண்டனர். இதே காலத்தில் யூதர்களின் பயங்கரவாத இயக்கமான இர்கன் (Irgun) தோற்றம் பெற்றது. இது பலஸ்தீன், பிரித்தானிய இலக்குகளை குறி வைத்ததாக அமைந்தது.

கி.பி. 1937

லோட்பீல் தலைமையில் பிரிட்டானிய இராஜ ஆணைக்குழு பலஸ்தீனின் 1:3 பகுதியை யூத நாடகவும் மிகுதியை அரபு நாடாகவம் பிரிக்கப் பிரேரித்தது. பலஸ்தீனர்களோ யூதக் குடியேற்றத்தை நிறுத்தும்படியும், பலஸ்தீன் ஒரே நாடாக இருக்க வேண்டுமெனவும் சிறுபான்மை சமூகத்தினரின் உரிமைகள் பாதுகாக்கப்படும் எனவும் கூறி பிரிவினையை எதிர்த்துப் புரட்சி செய்தார்கள். பிரித்தானியப் படைகளால் அப் புரட்சி அடக்கப்பட்டது

கி.பி. 1947

பலஸ்தீனின் நிர்வாகப் பொறுப்பை பிரித்தானியர்கள் விட்டுச் செல்ல ஆயத்தமாகி பிரச்சினையை ஐ.நா.வுக்குக் கொண்டு சென்றனர். பலஸ்தீன் ஐ.நா. வின் மேற்பார்வைக்குள் கொண்டு வரப்பட்டது. ஐ.நா. சபை பலஸ்தீனை இருகூறாக்கும் ஆலொசனையை முன்வைத்தது. அதன்படி 43.53 சதவீத நிலப்பரப்பு பலஸ்தீனர்களுக்கும் 56.47 சதவீத நிலப்பரப்பு யூதர்களுக்கும் செல்வதானல் பலஸ்தீனர்கள் அதனை ஏற்க மறுத்தார்கள். யூதர்கள் அதனை ஆதரித்தனர்.

கி.பி. 15.5.1948

இதனையடுத்து 15.5.1948 ல் இஸ்ரேல் நாடு பிரகடனப்படுத்தப்பட்டது. எகிப்து,சிரியா,லெபனான் ஆகிய அண்டை நாடுகள் அதற்கெதிராகப் படையெடுப்பு நடத்தி தோல்வி கண்டன. இஸ்ரேல் ஐ.நா. வழங்கவிருந்த எல்லைகளை விட அதிகமாக ஆக்கிரமித்துக் கொண்டது.

கி.பி. 1949

ஐ.நா. திட்டத்திற்கு மேலும் சில நிலப்பகுதிகளை இஸ்ரேல் ஆக்கிரமித்துக் கொண்டது.

கி.பி. 1956

கமால் அப்துல் நாசர் எகிப்தின் ஜனாதிபதியாக ஆனவுடன் சிரிய இராணுவத்துடன் தமது இராணுவத்தை இணைத்ததுடன் சுயஸ் கால்வாயை தேசியமயமாக்கினார்.

இதனை எகிப்து, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளுடன் இஸ்ரேலும் இணைந்து 29.10.1956 ல் சினாய் தீபகற்பத்துக்குள் பிரவேசித்தன. சர்வதேச அழுத்தம் காரணமாக இஸ்ரேல் சினாய் பாலைவனத்தைக் கைவிட்டது. இங்கிலாந்து, பிரான்ஸ் படைகள் திருப்பியழைக்கப்பட்டன.

கி.பி. 1964

பலஸ்தீன விடுதலை இயக்கம் (PLO) தோற்றுவிக்கப்பட்டது. இஸ்ரேலை அழித்து தமது பூமியை மீட்கப் போவதாகவும், தாமே பாலஸ்தீனர்களின் ஏகப் பிரதிநிதி எனவும் யாசிர்அரபாத் கூறினார்.

கி.பி. 1967

அண்டை அரபுநாடுகள் இஸ்ரேல் மீது போர் தொடுத்தன. ஆறு நாட்கள் நீடித்த யுத்தத்தில் இஸ்ரேல் எகிப்தின் சினாய்ப் பாலைவனத்தையும் மற்றும் ஜெரூஸலம் பழைய நகரையும் கைப்பற்றிக் கொண்டது. 1967 க்கு முந்திய எல்லைக்குள் இஸ்ரேல் மீள வேண்டும் என ஐ.நா. தீர்மானம் (242) நிறைவேற்றியது

கி.பி. 1973

யூதர்களின் பெருநாளான யோன் கிப்பு அன்று (அக்டோபர் 6) சிரியாவும், எகிப்தும் இஸ்ரேலுக்கெதிராக மீண்டும் ஒரு யுத்தத்தை ஆரம்பித்தன. இந்த திடீர் தாக்குதலின் போது எகிப்து, 1967 ல் (ஆறு நாள் யுத்தத்தில்) தான் இழந்த பெரும் பகுதிகளை மீண்டும் கைப்பற்றிக் கொண்டது.

கி.பி. 1979

கேம்ப் டேவிட் உடன்படிக்கை. அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்டர் முன்னிலையில், எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத்துக்கும் இஸ்ரே பிரதமர் (முன்னாள் பயங்கரவாத இயக்கத் தலைவன்) மெனாசெம் பெகினுக்குமிடையில் ஓர் உடன்பாடு கையெழுத்திடப்பட்டது. இதன் மூலம், எகிப்து இஸ்ரேலின் இருப்பை அங்கீகரித்து, இழந்த சினாய் பாலைவனத்தை மீண்டும் பெற்றுக் கொண்டது.

கி.பி. 1982

லெபனானிலிருந்த ஐ.நா. அகதிமுகாம்களான சப்ரா, சத்திலா ஆகியவற்றுள் யூத இராணுவம், தற்போதைய பிரதமரான ஏரியல் ஷரோனின் தலைமையில் புகுந்து நாசகார வேலைகளில் ஈடுபட்டு அகதிகளைக் கொன்று குவித்தது.

கி.பி. 1987

யூதக் குடியேற்றங்கள் மேற்குக் கரையில் தொடர்ந்த நிலையில் PLO வும் பலமிழந்து பல நாடகளிலிருந்தும் விரட்டப்பட்ட நிலையில், லெபனானில் அகதி முகாம்கள் மிருகத்தனமாக தாக்கப்பட்ட அதிர்ச்சியில், பலஸ்தீன முஸ்லிம்கள் தமது மக்கள் போராட்டமான இன்திபாழா வை பலஸ்தீனுக்குள் ஆரம்பித்தனர்.

கி.பி. 1993

1993 ஆஸ்லோ பிரகடனம் :

அமெரிக்க வெள்ளை மாளிகையில் வைத்து பெரும் ஆராவரத்துடன் இஸ்ரேலுக்கும், PLO க்கும் இடையில் கையெழுத்திடப்பட்ட பிரகடனம் ஒரு நிரந்தர உடன்படிக்கையாக இறுதி வரை அங்கீகரிக்கப்படவில்லை. இதன் அடிப்படையில் சில சம்பவங்கள் மேலோட்டமாக நடந்தேறின.

- பலஸ்தீனர்களுக்கும் சில நிலப்பரப்பு (மேற்குக் கரை, காஸாப் பகுதி) கையளிக்கப்பட்டது
- பலஸ்தீன அதிகார சபை PNA உருவாக்கப்பட்டு யாசர் அரபாத் ஜனாதிபதி என பட்டம் சூட்டப்பட்டார்.
- பலஸ்தீன போலீஸ்படை உருவாக்கப்பட்டு, ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிஹாத் வீரர்கள் நசுக்கப்பட்டனர்.

அடையப் பெறாதவை :

- ஜெரூஸலத்தின் அந்தஸ்து பற்றி எவ்வித முடிவுமில்லை.
- அகதிகளின் நிலைபற்றி முடிவில்லை.
- பலஸ்தீனின் எல்லைகள் பற்றி முடிவு (1967 க்கு முன்னுள்ள) இல்லை.

கி. பி. 2000

இதனால் செப்டம்பர் 2 ம் ஆண்டில் இரண்டாவது இன்திபாழா (மக்கள் போரட்டம்) ஆரம்பிக்கப்பட்டது. ஆஸ்லோ பிரகடனம் இயற்கை மரணம் எய்தியதாகவே கருதப்படுகிறது. இதனைத் தொடர்ந்து இஸ்ரேலியப் பிரதமராகப் பதவியேற்ற ஏரியல் ஷரோன், 2002 ல் ஜெனின் அகதி முகாம்களில் மீண்டும் வெறியாட்டம் நடத்தினான்.

(நன்றி : எங்கள் தேசம்).

லயன்ஸ், ரோட்டரி கிளப்புகளில் அங்கம் வகிக்கின்றீர்களா?

இந்த லயன்ஸ், ரோட்டரி போன்ற அமைப்புகள் பலமான யூத அடித்தளத்தைக் கொண்ட அமைப்பின் அழகிய முகங்களாகும். இதையறியாது அறிவும் ஆளமையும், தலைமைத்துவப் பண்பும் நிறைந்த நூற்றுக்கணக்கான உயர்தொழில் புரியும் முஸ்லிம்கள் இவ்வமைப்புகளின் பகட்டான நடைமுறைகளில் மயங்கிக் கிடக்கின்றார்கள். தமது சமூகத்தின் குறைபாடுகளுக்காக, அதனை விமர்சிக்கும் இவர்கள் இவ்வமைப்புகளில் அங்கத்துவம் பெறுவதைப் பெருமையாகவும், தமது வாழ்வின் ஒரு முக்கிய சாதனையாகவும் கருதுகிறார்கள். ஓ முஸ்லிம் சமூகமே!

யூதர்களின் லட்சியங்களை நிறைவேற்றிக் கொள்தவற்காக முஸ்லிம்கள் தினமும் 75 கோடி (இலங்கை) ரூபாயை அன்பளிப்பாக வழங்குகின்றார்கள். யூதர்களின் முன்னேற்த்திற்காக தமது தேறிய இலாபத்தில் 12 சதவீதத்தை வழங்கும் உலகின் மிகப் பெரிய சிகரட் கம்பெனியில் உற்பத்திகளை உபயோகிப்பதனாலேயே அவர்கள் இதனைச் செய்கின்றனர். இளைஞர்களும், பெண்கள், முதியோர் என்ற வித்தியாசமின்றி புகைபிடிக்கும் அரபு மக்களும், ஏனைய முஸ்லிம்களுமே இதில் பெரும்பங்கு வகிக்கின்றனர். அமெரிக்க வங்கிகளில் சேமிப்புச் செய்துள்ள முஸ்லிம்களின் 13 டிரில்லியன் டாலர் பணம் கொண்டு வரும் பணம் இந்த அன்பளிப்புக்குப் புறம்பானதாகும். தன்வினை தன்னைச் சுடும் என்பது இது தானே?